1989 ஏப்ரல் 29]

உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டுதல்

158—(*வினா எண். 517) திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி பேருந்து நிலையத்திற்குப் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது சூட்டப்படும்?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

பெரியாறு நீர்த்தேக்க நீர் மட்டத்தை உயர்த்துதல்

159—(*வினா எண். 372) திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியாறு நீர்த் தேக்கத்தின் நீர் மட்டத்தை 152 அடியாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): ஆம்.

பெரியாறு அணை கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் குறுக்கே 1896-ல் கட்டப்பட்டது. இந்த அணையில் நூறு ஆண்டுகாலமாக எந்தத் தொய்வும் இன்றி நீர் 152 அடி நிரப்பப்பட்டு வந்தது. ஆனால் 1973 ஆம் ஆண்டு கேரளாவிலிருந்து வெளியாகும் மலையாள மனோரமா என்ற பத்திரிக்கையில் பெரியாறு அணை பலகீனப்பட்டு இருப்பதாகவும்,

அது உடையக் கூடிய அபாயம் ஏற்படலாம் என்றும் ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் சென்ட்ரல் வாட்டர் கமிஷன் வந்து அணையை நேரில் பார்த்து அதைப் பாதுகாக்க சில யோசனைகளைத் தெரிவித்தது. இருந்தாலும் பயப்பட வேண்டிய அளவுக்கு எந்த விதமான பாதகமும் அணையில் இல்லை என்று கருத்துத் தெரிவித்தது. இருந்தாலும் மீண்டும் 1978 ஆம் ஆண்டில் இத்தகைய ஒரு புரளி கேரளாவில் பத்திரிக்கை மூலமாக கட்டவிழ்த்து விடப்பட்டது. மீண்டும் சென்ட்ரல் வாட்டர் கமிஷன் ஒரு நிபுணரை அனுப்பி அணையைப் பரிசோதிக்கச் செய்தது. அந்த நிபுணரும் அந்த அணையைப் பரிசோதித்து அணையினுடைய கொள்ளளவு 152 அடியிலிருந்து 145 அடிக்குக் குறைக்கலாம் என்று ஒரு யோசனையைத் தெரிவித்தார். இது கூட அணை பலகீனப்பட்ட காரணத்தால் அல்ல ; கேரள மக்களிடையே பரவி இருக்கிற பயத்தைப் போக்குவதற்காகத்தான். அதற்குப் பிறகு மீண்டும் மீண்டும் கேரள அரசும், கேரள மக்களும் பெரியாறு அணை பலகீனப்பட்டு இருக்கிறது என்று திரும்பத் திரும்ப சொன்ன காரணத்தால் 1979 ஆம் ஆண்டு அதே சென்ட்ரல் வாட்டர் கமிஷன் சேர்மன் திரு. கே. சி. தாமஸ் திருவனந்தபுரத்திற்கு வந்து நீண்ட நேரம் தமிழக, கேரள அரசு அதிகாரிகளை அழைத்துப் பேசி பிறகு அணையைப் பலப்படுத்துவது என்கிற முடிவுக்கு வந்து அதை மூன்று கட்டமாகச் செய்வது என்ற ஒரு முடிவை எடுத்தார்கள்.

முதற் கட்டம் அணையினுடைய நீர் மட்டத்தை 145 அடியிலிருந்து 136 அடிக்குக் குறைப்பது.

இரண்டாவது கட்டம் அணைக்கு மேற்புரத்தில் மூடிபோன்ற ஆர்.சி.சி. கேப் போடுவது.

மூன்றாவதாக உபரி நீர் வழிந்தோட கூடுதலாக சில மதகுகளை, வாய்க்கால்களை அமைத்தல். இது உடனடியாகச் செய்யப்பட வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

இரண்டாவது கட்டமாக அணையின் அடித்தளத்தை உயர் அழுத்த மின் கம்பிகள் மூலம் பாறையோடு இணைத்தல். அதை கேபிள் ஆங்கரிங் என்பார்கள். அதைச் செய்ய வேண்டும். நீண்ட காலப் பாதுகாப்புத் திட்டமாக அந்த அணைக்கு கான்கிரிட் பேக்கிங் மேற்கொள்ளுதல் வேண்டும். அணையின் அமைப்பை ஒட்டி அதே போல் இன்னொரு அணையைக் கட்டி அந்த அணையைப் பலப்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டு, அதில் முதல் இரண்டு கட்டங்கள் முடிவு பெற்று விட்டன. மூன்றாவது கட்டமான கான்கிரிட் பேக்கிங் ஒரு பகுதி அதாவது 75 அடி வரையில் பலப்படுத்தப்பட்டது. 75 அடியிலிருந்து மேல் மட்டம் வரையில் கட்டுகிற அந்தப் பணி மட்டும் இப்போது நடைபெற்று வருகிறது. ஆனால் 1980 ஆம் ஆண்டு இந்த அணையைப் பற்றி, இதனுடைய வேலைகளைப் பற்றி

பலப்படுத்துவதைப் பற்றி டில்லியில் ஒரு கருத்து ஆய்வு நடைபெற்றது. அந்தக் கருத்து ஆய்வில் இவைகளை எல்லாம், அதாவது நீர் அமைப்பை ஆர்.சி.சி. கேப் போடுவது, உபரி நீர் போக கூடுதலாக சில மதகுகளை அமைத்தல், கேப் ஆங்கரிங் போடுவது ஆகியவை நடைபெற்ற உடன் 136 அடியாக இருக்கிற அந்தத் தண்ணீரை 145 அடிக்கு மீண்டும் உயர்த்தலாம் என்றும் மூன்றாவது கட்டப் பணி முழுவதும் முடிந்ததற்குப் பிறகு....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆற்றுக்குப் பெயர் தான் பெரியாறு; ஆனால் விடை பெரிய விடையாக இருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே அதோடு சேர்த்துச் சொன்னால் தான் விளங்கும்; இல்லா விட்டால் மீண்டும் 152 அடி உயர்த்த வேண்டுமென்று சொன்னால் அவ்வளவாக விளங்காது என்ற காரணத்தால் தான் இந்த பேக்கிரவுண்டோடு சொன்னேன். மூன்றாவது கட்டப் பணி முடிந்த பிறகு 152 அடி வரையில் தண்ணீரை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்றாவது கட்டப் பணி எப்பொழுது முடியும்? இந்தப் பணி எந்த அரசால் டெண்டர் விடப்பட்டது? அதை யார் எடுத்தது? எவ்வளவு தொகைக்கு டெண்டர் விடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இனிமேல் துணைக் கேள்விக்காக அனுமதி கேட்கமாட்டீர்கள் என்று நினைக்கிறேன். நான்கு கேள்விகள் கேட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவரவர்களே, மூன்றாவது கட்டப் பணிக்கு முன் இருந்த பணியை, முன் இருந்த அரசுதான் செய்தது. அதிலே மூன்றாவது கட்டப் பணியும், இரண்டு கட்டமாக உண்டு. முதல் கட்டம், நான் முன்னால் குறிப்பிட்டதைப்போல முதல் 75 அடிக்கு Concrete backing போடுவது. இதை இராமலிங்கம் என்கிற ஒப்பந்தக்காரர் செய்து முடித்தார். இரண்டாவது, 75-லிருந்து மேல் மட்டம் வரையிலே போடுகிற Concrete backing. இது இரண்டாவது கட்டப் பணியாகும். அந்தப் பணியைச் செய்வதிலேதான் சில கோளாறுகள் ஏற்பட்டன. அதாவது ஆறுமுறை டெண்டர் விடப்பட்டிருக்கிறது. முதல் முறை விடுவது, கேன்சல் செய்வது, இரண்டாவது முறை டெண்டர் விடுவது, கேன்சல் செய்வது, மூன்றாவது முறை விடுவது. கேன்சல் செய்வது என்று இப்படி ஐந்து முறை நடந்து முடிந்து, ஆறாவது முறை தப்பித்தோம் பிழைத்தோம் என்று முடிவாகி கடைசியிலே டெண்டர் ஒப்பந்தக்காரருக்குக் கொடுக்கப்பட்டு, இப்பொழுது வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.